# 03 பலிப்பொருள் என மனம் (காணிக்கைப்பாடல்)

பாடல்: கிறிஸ்து ராஜன்
இசை: என்சோன் பாக்கியநாதன்
பாடியவர்: டெய்சி என்சோன்
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

## பல்லவி

பலிப்பொருள் என மனம் தருகின்றேன்
பரம்பொருள் பதம் அதைத் தருகின்றேன்
இறைவா என் தலைவா
நிறைவாய் நீ ஏற்பாய்

## சரணம்

1. விண்ணகம் துறந்த விண்ணவனே
   மண்ணகம் பிறந்த மன்னவனே
   படைப்பின் பொருள்தனை தர வந்தேன்
   பணிவின் மனதுடன் தருகின்றேன்
   இறைவா என் தலைவா
   நிறைவாய் நீ ஏற்பாய்

2. தன்னையே கொடுத்த தற்பரனே
   உண்மையில் நிலைத்த உத்தமனே
   இருக்கும் பொருள்தனை தர வந்தேன்
   இரங்கும் மனதினைத் தருகின்றேன்.
   இறைவா என் தலைவா
   நிறைவாய் நீ ஏற்பாய்

This song is prepared for **Iniya Ithayangal Whatsapp group** and linked in **www.manavai.com** **(2019)**